1982 பிப்ரவரி 2]

தார்கள்? அப்படிப் பலன் அடையாதவர்களுக்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது? இந்த வேலைத் திட்டத்தின்கீழ் பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் முறைப்படி அரிசி கொடுக்கப்படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அமலாக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். அதிலிருந்து உங்களுக்குப் புரிந்து இருக்கும். யாரும் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்ற நிலை தமிழகத்திலே இல்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். இன்னும் ஒன்றை நான் விளக்கமாகக் குறிப்பிட வேண்டுமானால் கிராம நல அலுவலரிடம் யார் யார் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்தார்களோ அவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரிடத்திலே பதிவு செய்தவர்கள் யாரும் வேலையில்லாமல் இல்லை, என்று தெரிவித்த பிறகும்கூட எவ்வளவு பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று கேள்வி கேட்டால்—இவ்வளவு மனித நாட்கள் அதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்து இருக்கிறேன்—அதற்காக ஏறத்தாழ $2\frac{1}{2}$ கோடி மனித நாட்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்று தான் சொல்ல முடியும். பதிவு செய்தவர்களில் யாருக்காவது வேலை கொடுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தால் நான் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசிடமிருந்து எவ்வளவு தொகை இதற்காகப் பெறப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தைப் பொறுத்தவரையில் 50 சதவீதம் மானியம் மத்திய அரசால் கொடுக்கப்படுகிறது. 50 சதவீதம் மானியம் தமிழக அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால் இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு எதுவும் கொடுப்பது இல்லை.

கரூர் ரயில் நிலையத்தருகில் அமராவதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம்

*வினா எண் 11—திரு எம். சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், கரூர் ரயில் நிலையத்தருகில், அமராவதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட வெள்ளத்தால் பழுதடைந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

(இ) அதுவரை அப்பாலத்தின் மீது, கார்கள், லாரிகள், பஸ்கள், மாட்டு வண்டிகள் செல்வதை அரசு தடை செய்யுமா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) புதிய பாலம் கட்டும் திட்டம் கரூர் நகராட்சியின் ஆய்வில் உள்ளது.

(இ) வாகனங்கள் போக்குவரத்தைத்தடை செய்து கரூர் நகராட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு எம். சின்னசாமி : இந்தத் திட்டத்திற்காக செலவிட அந்த நகராட்சியிலே பணவசதியில்லை என்ற தகவல் அரசுக்கு வந்ததா ? அப்படி வந்திருந்தால் அரசு அதற்காக ஏதாவது உதவி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : அந்த நகராட்சியின் சார்பிலே ரூபாய் 30 இலட்சம் மானியமாகக் கொடுக்க வேண்டுமென்ற தாக்கீதுகள் வந்திருக்கின்றன. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பை-பாஸ் பாலத்திற்கு தடுப்புச் சுவர்கள் இல்லாததால் அதன் வழியாகச் செல்கின்ற வண்டிகள் கீழே விழுந்துவிட்டன என்று செய்தி வந்தது. ஆகவே உடனடியாக தடுப்புச் சுவர்கள் கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: இதுவரையிலும் எந்த விதமான விபத்தும் ஏற்படவில்லை. இனிமேலும் நடக்கக்கூடாது என்றுதான் எதிர்பார்க்கிறோம். அதற்கு முன்பாகவே புதிய பாலம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு இரா. கருப்பையா : கரூர் நகரத்தை மற்றப் பகுதிகளோடு இணைக்கும் முக்கியமான, கேந்திரமான பாலமாக அது இருப்பதால் அரசே நேரடியாக அந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : அந்தப் பாலம் நகராட்சி எல்லைக்குள்ளே இருக்கிற பாலம், ஆகவே நகராட்சி மன்றம் தான் கட்ட வேண்டும். ஆனாலும் நிதிநிலை சரியில்லை என்று நகராட்சி தாக்கீது கொடுத்து இருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.